# பொருளியல்

## பணத்திற்கு கேள்வி ஏற்படுவதற்கான காரணங்கள், பணத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி 7.0

பணம் மற்றும் விலைமட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டில் வங்கியமைப்பு பங்களிப்புச் செய்யும் விதத்தை ஆராய்வர்

## தேர்ச்சி மட்டம் 7.2

பணத்திற்கு கேள்வி ஏற்படுவதற்கான காரணங்களையும் பணத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளையும் ஆராய்வர்

## பணத்தின் கேள்வி (Demand for Money)

குறித்த காலத்தில் பணத்தைப் பணமாக தம்மிடம் வைத்திருப்பதற்கு பொதுமக்களிடம் உள்ள விருப்பம் பணத்திற்கான கேள்வியாகும்.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பணத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள்:-

### பணத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள்

- வருமானம்
- வட்டி வீதம்
- பொது விலை மட்டம்

**MD=F(Y. R. P )**

### கொடுக்கல் வாங்கல் நோக்க பணக்கேள்வி

நபர்களின் வருமானக் கிடைப்பனவுகளும் செலவீட்டு நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று பொருந்தாத காரணத்தினால் பரிமாற்ற நோக்கங்களுக்காக பணக் கையிருப்புக்களை மக்கள் தம்மிடம் வைத்திருப்பது கொடுக்கல் வாங்கல் நோக்கத்திற்கான பணக்கேள்வி என அறியப்படுகின்றது.







தொகுப்பு :- திரு. இ. பிரபாகரன், (பொருளியல் ஆசிரியர்) யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்
கணினி வடிவமைப்பு :- திரு. ம. கீதன்ராஜ், (த.தொ.தொ. ஆசிரியர்) மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, தேசியபாடசாலை, மன்னார்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பாதுகாப்பு நோக்க பணக் கேள்வி (Precautionary Motive)

எதிர்பாராத நிலைமைகளில் ஏற்படக் கூடிய செலவுகளைச் செய்வதற்காக பொதுமக்கள் பணக்கையிருப்புக்களை தம்மிடம் வைத்திருப்பது பாதுகாப்பு, நோக்கப் பணக் கேள்வியாகும்




## ஊக நோக்கப் பணக் கேள்வி (Speculative Motive)

எதிர் காலத்தில் வருமானம் உழைக்கும் நோக்குடன் நிதிச் சொத்துக்களில் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக பொதுமக்கள் பணக்கையிருப்புக்களைத் தம்மிடம் வைத்திருப்பது ஊக நோக்கப் பணக் கேள்வி ஆகும். பணக்கேள்வியினை பிரதானமாக வட்டி வீதம் தீர்மானிக்கின்றது.







பணச்சந்தையில் இழிவு அளவான வட்டி வீதமொன்றில் ஊக நோக்கப் பணக்கேள்வி முடிவிலியாகக் காணப்படும். இதனை திரவப் பொறிநிலை என்பர்.

தொகுப்பு :- திரு. இ. பிரபாகரன், (பொருளியல் ஆசிரியர்) யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்
கணினி வடிவமைப்பு :- திரு. ம. கீதன்ராஜ், (த.தொ.தொ. ஆசிரியர்) மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, தேசியபாடசாலை, மன்னார்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk